செய்தி வெளியீடு எண் : 012 நாள் : 03.01.2023

செய்தி வெளியீடு

# எல்காட் சிறப்பு பொருளாதார மண்டலம் மற்றும் அதில் உள்ள தொழில்நுட்ப பூங்காகளில் ஆறு நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு ஆணைகளை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள் இன்று (03.01.2023) வழங்கினார்.

*******

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தொலைநோக்கு திட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் தமிழகத்தில் தழைத்து வளர தமிழக அரசின் கொள்கை அடிப்படையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம், சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை ( இரண்டு இடங்கள்), திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூரில் 8 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (எல்கோசெஸ்கள்) உருவாக்கி உள்ளது.

- எல்காட் மதுரை மாவட்டம் வடபழஞ்சி மற்றும் கிண்ணிமங்கலம் கிராமங்களில் 245.17 ஏக்கர் பரப்பளவில் ஒரு எல்கோசெஸ்ஸை நிறுவியுள்ளது.
- எல்காட் திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டானில் 200.04 ஏக்கர் பரப்பளவில் ஒரு எல்கோசெஸ்ஸை நிறுவியுள்ளது.
- எல்காட் கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டம் விஸ்வநாதபுரம் கிராமத்தில் 174.04 ஏக்கர் பரப்பளவில் நிறுவியுள்ளது.

மேற்கூறிய எல்கோசெஸ்ஸில் எல்காட் அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளான உட்புற சாலைகள், மழை நீர் வடிகால்வாய் வசதிகள், நடைபாதைகள், தரவு கேபிள் அகழி, மின் கேபிள் அகழி, நுழைவாயில், சுற்றுபுற சுவர் போன்றவற்றை முறையே எல்கோசெஸ் மதுரைக்கு ரூ.60.4 கோடி செலவிலும் எல்கோசெஸ் திருநெல்வேலிக்கு ரூ.31.82 கோடி மற்றும் எல்கோசெஸ் ஓசூர்க்கு ரூ.41.39 கோடி செலவில் ஏற்படுத்தியுள்ளது.

தற்போது புதிய தோழில்நுட்ப நிறுவனங்களுக்கான இட ஒதுக்கீடு பின்வருமாறு:

| **எல்கோசெஸ்** | **ஏக்கர்** | **நிறுவனத்தின் பெயர்** | **வேலைவாய்ப்பு உருவாக்கம் (அடுத்த 5 ஆண்டுகளுக்கு)** | **முதலீடு (அடுத்த 5 ஆண்டுகளுக்கு) (ரூ. கோடி)** |
|---|---|---|---|---|
| திருநெல்வேலி – கங்கைகொண்டான் | 33.57 | M/s Fishin' India Pvt. Ltd. | 1750 | 630.00 |
| திருநெல்வேலி – கங்கைகொண்டான் | 1.00 | M/s Ranger Technologies Pvt. Ltd., | 200 | 4.00 |
| ஓசூர் –விஸ்வநாதபுரம் | 12.04 | M/s International Aerospace Manufacturing Pvt. Ltd., | 175 | 134.84 |
| ஓசூர் –விஸ்வநாதபுரம் | 8.93 | M/s DILOGY Solutions LLP | 27 | 5.80 |
| மதுரை – வடபழஞ்சி | 3.16 | M/s Cloud Vantage Solutions Pvt. LTd., | 390 | 7.35 |
| மதுரை – வடபழஞ்சி | 10.19 | M/s DEW Info – Systems Pvt. Ltd. | 3200 | 9.00 |
| **மொத்தம்** | **68.89** | | **5742** | **790.99** |

இங்கு அமையும் அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் மூலம் இப்பகுதியிலுள்ள இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள் இன்று (03.01.2023) மேற்கூறிய ஆறு நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்.

முன்பதாக எல்காட் நிறுவனத்தின் சார்பில் 233 வது நிரந்தர ஆதார் மையம் கருவூலம் மற்றும் கணக்குத் துறை பேராசிரியர்.க.அன்பழகன் மாளிகை நந்தனம், சென்னை இன்று (03–01–2023) மாண்புமிகு.மனோ தங்கராஜ் அமைச்சர் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் சார்பில் துவங்கப்பட்டது.

அச்சமயம் எல்காட் நிறுவன மேலான்மை இயக்குனர் பிரவீன் பி நாயர் இ.ஆ.ப மற்றும் S. அருண்ராஜ் செயல் இ.ஆ.ப, இயக்குனர் மற்றும் க.விஜயேந்திர பாண்டியன் இ.ஆ.ப , கருவுல கணக்குத்துறை ஆணையர் கலந்து கொண்டனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 2022 வரை 86,71,157 நிரந்தர எல்காட் மையம் மூலமும்,பள்ளிக்கல்வி துறை ஆதார் மையங்களின் மூலம் 3,15,592 பரிவர்த்தனைகள் நடைபெற்றது.

**கீழ்கண்ட சேவைகள் பொது மக்களுக்கு வழங்கப்படும்**

ஆதார் தொடர்பான அனைத்து பணிகளும் பொது மக்களுக்கு அரசு நிறுவனம் எல்காட் மூலம் செய்து தருதல்.

| |
|---|
| 1) புதிய ஆதார் பதிவு செய்தல் (பிறந்த குழந்தை முதல் பதிவு செய்யலாம்) --கட்டணம் இலவசம் |
| 2).முகவரி,மின்னஞ்சல்,தொலைபேசி எண் மாற்றம். |
| பெயர்,பாலினம்,பிறந்த தேதி .---- 50/- ரூபாய். |
| 3).பயோமெட்ரிக் (கைரேகை மற்றும் கருவிழி மேம்படுத்தல்). ---- 100/- ரூபாய். |
| 5 வயது மற்றும் 15 வயது கடந்தவர்களுக்கு கட்டாய கைரேகை மற்றும் புகை படம் மேம்படுத்தல் ---- கட்டணம் இலவசம். |
| பணி நேரம் 10:00 மணி முதல் மாலை 5:45 வரை. |
| சனிக்கிழமைகளில் ஆதார் மையம் இயங்கும். |

-------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in